பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**07 07 2026** **7 15**

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** பிரதமர் திரு நரேந்திர மோடி, இந்தோனேசிய அதிபர் திரு. **Prabowo Subianto**-வுடன் இருதரப்பு உறவுகள் குறித்து இன்று பேச்சு நடத்துகிறார்.

**2.** வளர்ச்சியுடன் பாரம்பரியம் என்ற தொலைநோக்குப் பார்வையுடன் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா கூறியுள்ளார்.

**3.** நாட்டின் கடல்சார் துறையில் கடந்த 12 ஆண்டுகளில் மிகப் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் கூறியுள்ளார்.

**4.** இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து பஹ்ரைன் மன்னர் திரு ஹமாத் பின் ஈசா அல் கலீபா-வுடன் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் பேச்சு நடத்தியுள்ளார்.

**5.** உலக கோப்பை கால்பந்து போட்டியில் ஸ்பெயின் அணி காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, இந்தோனேசிய அதிபர் திரு. **Prabowo Subianto**-வுடன் இருதரப்பு உறவுகள் குறித்து இன்று பேச்சு நடத்துகிறார்.

நேற்று ஜகார்த்தா சென்றடைந்த அவருக்கு இன்று அதிபர் மாளிகையில் பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

அதனைத் தொடர்ந்து பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இரு தலைவர்களும் பேச்சு நடத்த உள்ளனர்.

இந்தப் பேச்சுவார்த்தைகளுக்குப் பின்பு புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்தாகும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அங்குள்ள இந்திய சமுதாயத்தினர் இடையேயும் திரு. நரேந்திர மோடி உரையாற்ற உள்ளார்.

<<<<>>>>

வளர்ச்சியுடன் பாரம்பரியம் என்ற தொலைநோக்குப் பார்வையுடன் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா கூறியுள்ளார்.

ஜனசங்க நிறுவனர் ஷ்யாமா பிரசாத் முகர்ஜியின் 125வது பிறந்த தினத்தை முன்னிட்டு கொல்கத்தாவில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் ஷ்யாமா பிரசாத் முகர்ஜியின் 125 அடி உயர சிலைக்கு அடிக்கல் நாட்டினார்.

நிகழ்ச்சியில் பேசிய திரு. அமித் ஷா, ஷ்யாமா பிரசாத் முகர்ஜிக்கு மரியாதை செலுத்துவதோடு நிறுத்திவிடாமல் அவரது கொள்கைகளை பின்பற்ற வேண்டும் என்று கூறினார்.

அவரது கொள்கை அடிப்படையிலான ஆட்சிதான் தற்போது மத்தியிலும், மேற்குவங்க மாநிலத்திலும் நடைபெறுவதாக அவர் தெரிவித்தார்.

தேசத்தை வலுவாக கட்டமைக்க ஷ்யாமா பிரசாத் முகர்ஜி வழிகாட்டியுள்ளதாகவும் அவர் கூறினார்.

மேற்குவங்க மாநிலத்தில் தற்போது வளர்ச்சித் திட்டங்கள் வேகம் பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஊழல் செய்தவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்றும், மத்திய அரசின் மக்கள் நலத்திட்டங்கள் மேற்குவங்கத்தில் மேலும் விரைந்து செயல்படுத்தப்படும் என்றும் திரு. அமித் ஷா கூறினார்.

<<<<>>>>

நாட்டின் கடல்சார் துறையில் கடந்த 12 ஆண்டுகளில் மிகப் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் கூறியுள்ளார்.

இந்திய கடல்சார் பல்கலைக்கழகத்தின் செயல்பாடுகள் குறித்து புதுதில்லியில் நேற்று அவர் ஆய்வு மேற்கொண்டார்.

கடல்சார் கல்விச் சூழலில் கடந்த சில ஆண்டுகளில் மிகப்பெரிய வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தப் பல்கலைக்கழகம் உலகின் முன்னணி 10 கடல்சார் பல்கலைக்கழகங்களுக்குள் இடம்பெற்றுள்ளதாக அவர் கூறினார்.

வகுப்பறை சூழலில் இருந்து கடல்சார் துறையில் ஆராய்ச்சி மற்றும் புதுமைக் கண்டுபிடிப்பு சூழலுக்கு மாற்றுவதில் இப்பல்கலைக்கழகம் முக்கிய பங்காற்றுவதாக அவர் தெரிவித்தார்.

புதிய தேசிய கல்விக் கொள்கைக்கு ஏற்ப இப்பல்கலைக்கழக பாடத் திட்டங்களிலும் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

கடல்சார் துறையில் உலகத்தரம் வாய்ந்த உள்கட்டமைப்புகளை உருவாக்கும் நோக்கில் அரசு செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

துறைமுகங்கள் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு. சர்பானந்த சோனோவால் கூறினார்.

<<<<>>>>

பஹ்ரைன் மன்னர் திரு ஹமாத் பின் ஈசா அல் கலீபா-வுடன் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் பேச்சு நடத்தியுள்ளார்.

நான்கு நாடுகள் பயணத்தின் இரண்டாவது கட்டமாக பஹ்ரைன் சென்றுள்ள அவர், இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து அந்நாட்டு மன்னருடன் ஆலோசனை மேற்கொண்டார்.

அங்குள்ள இந்திய வம்சாவளியினருடனும் டாக்டர் ஜெய்சங்கர் கலந்துரையாடினார்.

பஹ்ரைன் வெளியுறவு அமைச்சர் திரு. Abdul Latif Bin Rasheed உடனும் திரு. ஜெய்சங்கர் பேச்சு நடத்தினார்.

<<<<>>>>

ஒடிசாவில் பூரி ஜெகன்நாதர் ரத யாத்திரையை முன்னிட்டு 300க்கும் மேற்பட்ட சிறப்பு ரயில்களை இயக்க திட்டமிடப்பட்டுள்ளதாக ரயில்வே நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக மத்திய ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் மற்றும் ஒடிசா முதலமைச்சர் திரு. மோகன் சரண் மஜி

ஆகியோர் தலைமையில் புவனேஷ்வரில் நேற்று ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

கூட்ட நெரிசலைக் கையாள்வது மற்றும் பயணிகளுக்கு உரிய வசதிகளை ஏற்படுத்தி தருவது குறித்து ரயில்வே அமைச்சர் ஆய்வு மேற்கொண்டார்.

பூரி ரயில் நிலையத்தில் பயணிகள் வசதி மற்றும் பிற ஏற்பாடுகள் குறித்தும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

<<<<>>>>

மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனமான **HMT** நிறுவனத்திற்கு புத்துயிரூட்டும் நடவடிக்கைகளுக்கு கர்நாடக அரசு முட்டுக்கட்டை போடுவதாக கனரக தொழில்துறை அமைச்சர் திரு. குமாரசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

பெங்களூருவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்நிறுவனத்தை மறுசீரமைக்கும் திட்டம் முக்கியமான கட்டத்தை எட்டியிருப்பதாக கூறினார்.

ஆனால் மாநில அரசு வனத்துறை மூலம் நோட்டீஸ் அனுப்பி தடைகளை ஏற்படுத்தி இருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதில் அதிகார வரம்பை மீறி மாநில அரசு செயல்படுவதாக அவர் தெரிவித்தார்.

மாநில அரசின் இதுபோன்ற நடவடிக்கைகளால் கர்நாடகாவில் தொழில் முதலீடுகள் பாதிக்கப்படும் என்று அவர் கூறினார்.

**HMT** நிறுவன ஊழியர்கள் இதனால் கவலையடையத் தேவையில்லை என்றும், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு தொழிலாளர்களின் நலனை உறுதி செய்யும் என்றும் திரு. குமாரசாமி தெரிவித்தார்.

<<<<>>>>

மத்தியப்பிரதேசத்தில் முதலீடுகளை அதிகரிக்க மாநில அரசு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அம்மாநில முதலமைச்சர் திரு. மோகன் யாதவ் கூறியுள்ளார்.

போபாலின் கோலார் பகுதியில் புதிய தொழிற்பூங்காவிற்கு நேற்று அவர் அடிக்கல் நாட்டினார்.

இத்திட்டம் **15** ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பை வழங்கும் என்று அவர் கூறினார்.

மாநிலத்தின் தொழில் வளர்ச்சியையும் இது அதிகரிக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட முதலீட்டாளர்கள் மாநாட்டின்போது 30 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கான முதலீடுகளுக்கான் முன்மொழிவு பெறப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இதில் 10 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகள் தொடர்பான பணிகள் தொடங்கப்பட்டு விட்டதாகவும் திரு. மோகன் யாதவ் கூறினார்.

<<<<>>>>

உத்தரப்பிரதேசத்தின் ஜலாலாபாத் நகரம், பரசுராம்புரி என பெயர் மாற்றம் செய்யப்படுவதாக அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் தலைமையில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான் முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய துணை முதலமைச்சர் திரு. பிரஜேஷ் பதக், வேளாண்மை, தொழில்துறை வளர்ச்சி, சுகாதார கட்டமைப்புகள் மேம்பாடு போன்றவை தொடர்பாக 28 முக்கிய முன்மொழிவுகளுக்கும் அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

<<<<>>>>

நாட்டின் எஃகுத்துறை நடப்பு நிதியாண்டில் 6 சதவீத வளர்ச்சியை எட்டியுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

நடப்பு நிதியாண்டில் ஏப்ரல், ஜூன் கால கட்டத்தில் 41 மில்லியன் டன் எஃகு உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த நிதியாண்டின் இதே காலகட்டத்தில் 38 புள்ளி 7மில்லியன் டன்னாக இருந்தது என எஃகு அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

ஃபிரான்சின் தெற்குப் பகுதியில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீ காரணமாக கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

ஸ்பெயின் எல்லைக்கு அருகில் உள்ள பகுதிகளில் ஏற்பட்டுள்ள இந்தக் காட்டுத் தீயால் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் அப்பகுதியில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

ஸ்வீடன் மற்றும் சைப்ரஸ் நாடுகளில் இருந்து ஃபிரான்சுக்கு தீயணைப்பு படையினர் அனுப்பப்பட்டுள்ளதாக ஐரோப்பிய யூனியன் தெரிவித்துள்ளது.

காட்டுத் தீயை அணைக்க ஃபிரான்சுக்கு அனைத்துவிதமான உதவிகளும் வழங்கப்படும் என்று ஐரோப்பிய யூனியன் தலைவர் திருமதி Ursula Wonderleyen தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மகாராஷ்டிராவில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கனமழை தொடர்பான சம்பவங்களில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 13ஆக அதிகரித்துள்ளது.

நாளை வரை மும்பை மற்றும் சுற்று வட்டார பகுதிகளுக்கு கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து மும்பை, தானே உள்ளிட்ட இடங்களில் கல்வி நிறுவனங்களுக்கு இன்று விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு மாவட்டங்களில் மழை தீவிரமடைந்து வரும் நிலையில் தேசிய பேரிடர் மீட்பு படையின் 17 குழுக்கள் மாநிலத்தில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதனிடையே குஜராத், கர்நாடகா, ஹரியானா, பஞ்சாப், சத்தீஸ்கட், ஹிமாச்சலப்பிரதேசம், உத்தராகண்ட், மேற்குவங்கம், சிக்கிம் ஆகிய மாநிலங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் இன்று மிக

கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

கேரளா, ஒடிசா, ராஜஸ்தான், ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களின் சில இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

கனமழை எச்சரிக்கையை தொடர்ந்து ஒடிசாவில் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக புவனேஸ்வரில் நேற்று மாநில பேரிடர் மேலாண்மை அமைச்சர் திரு. சுரேஷ் புஜாரி தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

மகாநதி, தேவி, ஜலகா ஆகிய நதிகளில் தற்போது வெள்ளம் அபாய கட்டத்திற்கு கீழேயே இருந்து வருவதாகவும், வெள்ள நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

<<<<>>>>

உலக கோப்பை கால்பந்து போட்டியில் ஸ்பெயின் அணி காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

இன்று அதிகாலை **Dallas**-ல் நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் ஸ்பெயின் அணி **1-0** என்ற கோல் கணக்கில் போர்ச்சுகலை வென்றது.

------------

பெல்ஜியத்தில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manas Dhamne** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**<<<<The End>>>>**